**O.S.No.75 /2015**

**நாள்:23.08.2022**

**வா.சா.2 கனல்ராமலிங்கம்**

**<u>2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கடத்தூர் கிராமத்தில் வசிப்பதாக சொல்லிஉள்ளேன் கதவு எண் என்ன என்றால் நினைவில்லை. கடத்தூர் கிராமம் என்பது பேரூராட்சி ஆகும். பேரூராட்சியில் நான் எத்தனையாவது வார்டில் வசிக்கிறேன் என்றால் 2வது வார்டில். நான் பெத்தானூர் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் நான் பிறந்த ஊர் அது. நான் தற்போதும் பெத்தானூர் கிராமத்தில் தான் வசிக்கிறேன் என்றால் இல்லை. என்னுடைய முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் வசிக்கிறேன் என்றால் கடத்தூர் பேரூராட்சி வார்டு எண் கதவு எண் ஆகியவைகளை குறிப்பிட்டிருப்பேன் என்றால் தற்போது நினைவில்லை. என்னுடைய முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் கண்ட முகவரிக்கான அடையாள அட்டை இல்லை என்றால் இருக்கிறது கொண்டு வரவில்லை. நான் நீதிமன்றத்தில் இது வரை சுமார் எத்தனை வழக்குகளில் சாட்சியமளித்துள்ளேன் என்றால் இப்போது தான் முதன் முதலில் வருகிறேன். வழக்கு சொத்து என்ன வகை சர்வே எண் என்ன விஸ்தீரணம் என்று சொல்ல முடியுமா என்றால் சந்தை புறம்போக்கு வகை அதன் சர்வே எண் விஸ்தீரணம் தெரியாது. சந்தை புறம்போக்கு அதில் தற்போது என்ன உள்ளது என்றால் தனியாரின் ஆக்கிரமிப்பாக உள்ளது. சந்தைபுறம்போக்கு கடத்தூர் முதல் தருமபுரி செல்லும் தார்சாலைக்கு மேற்குபுறத்தில் உள்ளது என்றால் சரிதான். இதன் விஸ்தீரணம் சுமார் *1* ஏக்கர் *21* சென்ட் இருக்கும் என்றால் சரிதான். சந்தைபுறம் போக்கின் தெற்கு பக்கம் புதுரெட்டியூர் செல்லும் தார்சாலை உள்ளது என்றால் சரிதான். வடக்கு புறம் கடத்தூர் அரசு பெண்கள் மேல்நிலை பள்ளி செல்லும் தார் சாலை உள்ளது என்றால் சரிதான். இந்த இடைபட்ட பகுதியில் கடத்தூர் புதிய பேருந்து நிலையம் கடத்தூர் காவல் நிலையம், சமுதாய கூடம், கடத்தூர் சீனிவாச பெருமாள் கோவில் அமைந்துள்ளது என்றால் சரிதான்.

வடக்கு புறத்தில் அரசு பெண்கள் மேல்நிலைபள்ளி செல்லும் தார்சாலைக்கு வடக்கு பக்கம் பிரதிவாதிகள் உடைய கடை உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகளின் கடைக்க அடுத்தற்போல வாதியின் கடை மற்றும் ஒரு மேல்மாடி உள்ளது என்றால் சரிதான். வாதியின் கடை கிழக்கு பார்த்தாற்போல் திசையில் உள்ளது என்றால் சரிதான். அந்த கடை முன்பு தர்மபுரி கடத்தூர் மெயின்ரோடு உள்ளது என்றால் சரிதான். வாதியின் கடைக்கு செல்லவேண்டுமானால் தருமபுரி கடத்தூர் தார் சாலையிலிருந்து நேரடியாக செல்லலாம் என்றால் போகமுடியாது. ஏன் போக முடியாது என்றால் தடம் இல்லை. நான் சொல்வது தவறு என்றாலும் தர்மபுரி கடத்தூர் செல்லும் ரோடில் வாதிகளுக்கு செல்லும் கடைக்கு நேரடியாக செல்லலாம் என்றால் போகமுடியாது. பிரதிவாதிகள் பெட்டி கடை எப்போது முதல் நடத்தி வருகிறார்கள் என்றால் அவரது தாத்தா வைத்த கடை. அந்த தாத்தா பெயர் என்ன என்றால் அண்ணாமலை. அண்ணாமலைக்கு அடுத்து அவரது மனைவி சுந்தரியம்மாள் என்றால் பெயர் தெரியாது ஆனால் பார்த்துள்ளேன். அண்ணாமலையின் இறப்பிற்கு பின்னிட்டு அவரது மனைவி அந்த கடையை நடத்தி வந்தார் என்றால் சரிதான். அவர் இறந்த பிறகு ரூக்கு மணி அவர் குடும்பத்துடன் கடையை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அண்ணாமலை அவரது மனைவி ஆகியோர் கடை வைத்து சுமார் எத்தனை ஆண்டு காலம் இருக்கும் என்றால் தோராயமாக 50 ஆண்டு காலம் இருக்கும். 50 ஆண்டு காலத்தில் 2ம் வாதி *1* முதல் 3 பிரதிவாதிகள் மீது எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியாது. தருமபுரி மெயின் ரோடுக்கும் சத்தியநாராயணன் கடைக்கும் இடையை மாடி படி உள்ளதா என்றால் இல்லை. அப்படி படி இருந்து பிரதிவாதிகள் ஏதாவது சுமார் 7 வருடத்திற்கு முன்பு சுவர் வைத்து கட்டினார்களா என்றால் பிரதிவாதிகள் பெட்டி கடையை நீட்டிப்பு செய்து விட்டார். தற்போதும் வாதியின் கடை செயல்பாட்டில் உள்ளதா என்றால் உள்ளது. சத்தியநாராயணனின் கீழ் தளத்தில் இருந்து மேல்தளத்திற்கு படி உள்ளதா என்ற விவரம் தெரியுமா என்றால் படி இல்லை.

அவருடைய கடையின் அளவுகள் என்னால் சொல்ல முடியுமா என்றால் தெரியாது. சத்தியநாராயணின் தரை தளத்தில் இருந்து மேல் தளத்திற்கு செல்வதற்கு படி வைத்து கொள்ளலாம் என்றால் வைக்க முடியாது. பிரதிவாதிகளின் நிலத்தில் தான் பெட்டி கடையில் வைத்து தான் படி வைக்க முடியுமா என்றால் முடியாது. பிரதிவாதிகள் சந்தை புறம்போக்கு ஏதாவது ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று சொல்லிஉள்ளேனா என்றால் நினைவில்லை. பிரதிவாதிகள் சந்தை புறம்போக்கு பாதையில் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்பை அகற்றினால் தான் வாதியின் கடை மற்றும் மாடி பகுதிக்கு செல்லமுடியும் என்று சொல்லிஉள்ளேனா என்றால் சொல்லிஉள்ளேன். எவ்வளவு ஆக்கிரமிப்பு எந்த வருடம் ஆக்கிரமிப்பு என்ற விவரம் என்ன என்றால் கதவு இருக்கிறது படிகட்டு இருக்கிறது படிகட்டுக்கு போகமுடியாத அளவிற்கு சுவர் கட்டியுள்ளார்கள் அது தான் வேண்டும் என்று கேட்கிறேன். கதவு படி சுவர் இது எந்த சர்வே எண்ணில் வருகிறது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் பிரதிவாதிகள் கதவு படி சுவர் கட்டி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் வாதியின் கடை மற்றும் முதல் தளத்திற்கு அவருடைய சொத்தின் வழியாகவே செல்ல வழிகள் உள்ளது இருப்பினும் இந்த பிரதிவாதிகளின் பெட்டி கடையை சந்தை புறம்போக்கு ஆக்கிரமிப்பு என வாதி தாக்கல் செய்த தாவாவில் நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எவ்வகையான ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும் அவர்களின் பெயரில் உள்ள ஆவணத்தின் அடிப்படையில் சொத்தை அனுபவித்து பெட்டி கடை நடத்தி வருகிறார்கள் என்றாலும் அண்ணாமலை மனைவி சுந்தரியம்மாள் சந்திரன் (எ) சுந்தர்ராஜன் பெயரிலுள்ள பதிவு மற்றும் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் தான் பிரதிவாதிகள் அவர்கள் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சங்கதிகள் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.